**தமிழ்நாடுவேளாண்மைப் பல்கலைக்கழகம்**

**&**

**இந்தியவானிலைத்துறை**

**வேளாண் காலநிலைஆராய்ச்சி மையம், கோவை**

**திருப்பூர்மாவட்டவானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

**(31.01.2024 முதல் 04.02.2024)**

**அறிக்கைஎண் 009/2024** **தேதி.30.01.2024**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 19°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 18°செ முதல் 23°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 3°செ முதல் 9°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது

**திருப்பூர்மாவட்டத்தின்கடந்தவாரவானிலை**

திருப்பூர் மாவட்டத்தின் 25.01.24 முதல் 29.01.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 30°செ முதல் 32°C ஆகவும் இரவுநேரவெப்பநிலை 21°Cமுதல் 22°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 89 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 31 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-11 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

**திருப்பூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை**

| கடந்தவாரவானிலை (23.01.2024 முதல் 24.01.2024) | | | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 30.01.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 16/01 | 17/01 | 17/01 | 17/01 | 17/01 | தேதி | நாள்-1 26/01 | நாள்-2 27/01 | நாள்-3 28/01 | நாள்-4 29/01 | நாள்-5 30/01 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 1 | 0 |
| 32 | 32 | 32 | 30 | 31 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 31 | 30 | 31 | 31 | 32 |
| 21 | 21 | 21 | 21 | 22 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 19 | 20 | 20 | 20 | 20 |
| 4 | 4 | 6 | 5 | 6 | மேக மூட்டம் (ஆக்டா) | 5 | 5 | 6 | 2 | 0 |
| 79 | 81 | 89 | 86 | 80 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 90 | 90 | 70 | 90 | 90 |
| 35 | 31 | 46 | 36 | 38 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 40 | 40 | 40 | 40 | 40 |
| 10 | 11 | 10 | 9 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 6 | 4 | 8 | 10 | 10 |
| 90 | 90 | 70 | 70 | 70 | காற்றுவீசும் திசை | 110 | 200 | 110 | 90 | 90 |

**எதிர்பார்க்கப்படும் வானிலை திருப்பூர் (31.01.2024 முதல் 04.02.2024))**

வரும் நாட்களில்வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 30°செ முதல் 32°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 19°செ முதல் 20°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 90

சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 40 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 4-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் தென் கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| திருப்பூர் மாவட்டத்தில் உள்ளதாகுதிவாரியாகஉள்ள அடுத்தஐந்துநாட்களுக்கானமழையளவு | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அவினாசி | தாராபுரம் | குடிமங்கலம் | காங்கேயம் | குண்டடம் | மடத்துக்குளம் | மூலனூர் | பல்லடம் | பெங்கலூர் | திருப்பூர் | உடுமலைப்பெட் | ஊத்துக்குளி | வெள்ளக்கோவில் |
| **31-01-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **01-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **02-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **03-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **04-02-2024** | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொதுஅறிவுரை | | அடுத்து வரும் நாட்களில் மேற்குமண்டலப குதிகளில் 4 -10 கி.மீ வேகமான காற்றுடன் வறண்டவானிலைஎதிர்பார்க்கப்படுகிறது.<br>பகல் நேர வெப்பநிலைசற்று உயர்ந்து வருகிறது.<br>மண் ஈரத்தினைபொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்து பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>வறண்ட வானிலையினைப் பயன்படுத்தி அறுவடை நிலையிலுள்ளபயிர்களில் உடனடியாக அறுவடை செய்து அறுவடை செய்து நன்கு உலர்த்தி சேமிக்கவும்.<br>அறுவடைமுடிந்தபிறகுநிலத்தினைகொத்துஅல்லதுசட்டிக் கலப்பைகொண்டு உடனடியாக உழுவதன் மூலம் களைகளை கட்டுப்படுத்துவதுடன் கோடைகால மழையின் ஈரப்பத்ததை சேகரிக்கலாம்.பயிர் கழிவுகளை எரிக்காமல், நிலத்தில் உழுவதன் மூலம் பயிர் கழிவுகள் எளிதில் மட்கும். |
| நெல் | பூக்கும் பருவம் | நிலவும் வானிலையில் நெற்பயிரில் கதிர் நாவாய் பூச்சியின் தாக்குதல் தென்பட்டால் ஒருலிட்டர் நீரில் 2 மில்லி டைக்குளோர்வாஸ் கலந்து தெளிக்கவும். |
| மக்காசோளம் | விதைப்பு | நிலவும் வானிலையினைப் பயன்படுத்தி நீர்ப்பாசனம் உள்ள இடங்களில் மட்டும் இறவை மக்காசோள விதைப்பினை மேற்கொள்ளவும். |

| | | |
|---|---|---|
| கரும்பு | நடவு | தற்போது நிலவும் காலநிலையை கருத்தில் கொண்டு முன் பருவ கரும்பு சாகுபடியை உடனடியாக மேற்கொள்வதன் மூலம் அதிக மகசூல் பெறலாம். |
| வாழை | | தற்போது நிலவும் வானிலையால் வாழையில் சிக்காடாக்கோ இலைப்புள்ளிநோய் குறிப்பாக மண் ஈரம் அதிகமான இடங்களில் வரவாய்ப்புள்ளது. வயலை காய விட்டு நோய் தாக்கிய இலைகளை பறித்து எரித்து விடவும், மேலும் ஒரு லிட்டர் தண்ணீருக்கு கார்பன்டசிம் 1 கிராம் என்றஅளவில் கலந்து தெளிக்கவும். |
| கால்நடைகள் | | தற்போது நிலவும் வானிலையால் கறவை மாடுகளில் மடிவீக்கநோய் பரவ வாய்ப்புள்ளது. எனவே ஒரு சதம் பொட்டாசியம் பெர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு பால் கறப்பதற்கு முன்னும் பின்னும் மடியை சுத்தம் செய்யவும். |

## குறுஞ்செய்தி

- நிலவும் வானிலையால் வாழையில் சிக்காடாக்கோ இலைப்புள்ளிநோய், குறிப்பாக மண் ஈரப்பதம் அதிகமுள்ள பகுதிகளில் வர வாய்ப்புள்ளது. இதனைத் தவிர்க்க வயலை காயவைத்து கார்பன்டைசிம் 1 கிராம் என்ற அளவில் கலந்து தெளிக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**